DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai
**CC. No. 87/2025**

**Deposition of LW1 examined as PW1 (Complainant)** Dt. 15.09.2025

| | |
|---|---|
| Name | ரவி |
| Father's/Husband's Name | நாராயணசாமி |
| Village | செம்பதனிருப்பு |
| Taluk | மயிலாடுதுறை |
| Age | 52/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 15.09.2025

(A2, A3 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 14.07.2024 அன்று காலை 9.30 மணியளவில் நானும் என் மகனும் வீட்டில் இருந்தோம். அந்த சமயம் என் மனைவி வீட்டின் பின்பகுதியில் கொல்லைபுறத்தில் வேலை செய்து கொண்டிருந்தாள். எங்களிடம் 10 கோழிகள் இருந்தது. எதிரிகளாகிய தீனதயாளன், பிரசாந்த்குமார், செல்வகுமார் ஆகியோர் அவர்களது வயலில் விஷம் கலந்த மருந்தை வயலில் கோழிகள் மேயக்கூடாது என்பதற்காக போட்டு கொண்டு இருந்தனர். தொடர்ந்தார் போல் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள எங்களது, இடத்திலும் விஷம் கலந்த மருந்தை தெளித்தனர். அதற்கு என் மனைவி எதிர்ப்பு தெரித்தபோது எதிரி பிரசாந்த்குமார், செல்வகுமார் ஆகிய இருவரும் என் மனவியை உன்னைத்தாண்டி எதிர்பார்த்தோம் குச்சிக்காரி, தேவிடியா என்று திட்டி எதிரிகள் பிரசாந்த்குமார், செல்வகுமார் என் மனைவியின் தலை முடியை பிடித்து வயலில் சேற்றில் போட்டு மிதித்தனர். சத்தம் கேட்டு நானும், என் மகனும் சென்று தடுத்த போது கட்டையால் எதிரிகள் பிரசாந்த்குமார், செல்வகுமார் என் மனைவியை தலையில் அடித்தனர். பின்னர் தடுக்க சென்ற என்னையும், என் மகனையும் தீனதயாளன் இறுக்கி பிடித்து கொண்டார்கள். எதிரிகள் மூவரில் கட்டையால் செல்வகுமாரும், கம்பியால் பிரசாத்குமார் என்னையும், என் மகனையும் தலையில் தாக்கினர். குடும்பத்தோடு உங்களை காலி செய்து விடுவோம் என்று எதிரி பிரசாந்த்குமார் கொலை மிரட்டல் விடுத்தார். எதிரிகள் எங்களை தாக்கயதில் எங்களுக்கு சுயநினைவு இல்லாமல் போனது அந்த வழியாக வந்த ரஞ்சித்குமார், அந்த

வழியாக வந்த டாடா ஏசி வாகனத்தில் கீழையூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். அங்கிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக மயிலாடுதுறை அரசு மருத்துமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். நாங்கள் மூவரும் மருத்துவனையில் 8 நாட்கள் தங்கி உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். எனது இடது பக்க மண்டையில் 8 தையல்கள் போட்டனர். எனது மகனுக்கு உச்சி மண்டையில் 9 தையல்கள் போட்டனர். எனது மனைவிக்கு தலையில் ரத்த கட்டு இருந்ததற்கு சிகச்சை அளித்தனர். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார்வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

நான் என் முதல் விசாரணையில் நானும், என் மகனும் வீட்டில் இருந்ததாகவும் என் மனைவி வீட்டின் கொல்லைப்புறத்தில் இருந்ததாகவும், தெரிவித்த விவரங்களை எனது புகார்வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது முதல் விசாரணையில் எங்களுக்கு சொந்தமாக 10 கோழிகள் இருப்பதாகவும், எதிரிகள் அவர்களது நிலத்தில் கோழிகள் மேயக்கூடாது என்பதற்காக விஷம் கலந்த மருந்து தெளித்ததாக குறிப்பிட்ட விபரத்தை எனது புகார் வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணை கிலோ குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனது முதல் விசாரணையில் அந்த வழியாக வந்த ரஞ்சித் குமார் எங்களை டாடா ஏசி வாகனத்தில் கீழையூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாக குறிப்பிட்ட விபரத்தை எனது புகார்வாக்குமூலத்திலோ, போலீசார் விசாரணையிலோ குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நானும் என் மகனும் சத்தம் கேட்டு தான் சென்று பார்த்தோமா என்றால் என் மனைவியின் அலறல் சத்தம் கேட்டு சென்று பார்த்தோம். எதிரிகள் மூவரும் எனது சகோதரரின் மகன்கள் என்றால் சரிதான். நடந்ததாக கூறப்படும் சம்பவத்தில் 1-வது எதிரிக்கு காயம் ஏற்பட்டு அவர் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்திற்கும், எனது சகோதரர் குடும்பத்திற்கும் இடையே இடப்பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். 1-வது எதிரி பிரசாந்த்குமார் என் மனைவி மற்றும் மகன் மீது தன்னை தாக்கியதாக புகார்வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1-வது எதிரி என்ன ஆனார் என்றால் அவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவர் இறப்பிற்கு யாரெல்லாம் காரணம் என ஒரு வாக்குமூலம் எழுதி ஆய்வாளருக்கு அனுப்பி உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

15.9.25

என் மனைவி தான் பிரசாந்த்குமாரை திட்டி தாக்கி கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் 2,3 எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து புகார் அளிக்க உதவியாக இருந்தார்கள் என்ற காரணத்தினாலும், என் மனைவியை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் 2,3 எதிரிகள் மீது பொய்யான புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் என் மனைவியாலும் மற்றும் தடுமாறி கீழே விழுந்ததாலும்தான் எனக்கு ஏற்பட்டது என்றால் சரியல்ல. காயம்பட்டு கீழையூர் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். அங்கு எங்களுக்கு முதல் உதவி சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின் மருத்துவரின் அறிவுரைப்படி மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம் என்றால் சரிதான். கீழையூர் மருத்துவமனையில் மருத்துவர் விசாரணையின் போது எனக்கு ஏற்பட்ட காயம் என் மனைவியாலும் கீழே விழுந்ததாலும் தான் ஏற்பட்டது என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிகள் என்னையோ எனது மனைவியையோ தாக்கவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் மிரட்டியதாகவும், என் மனைவியை திட்டியதாகவும், அவரின் தலைமுடியை பிடித்து அடித்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரியல்ல.

N. ராணி

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானது என்று ஏற்கப்பட்டது.

17. [signature] 15.9.23

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை